19

ஸ்ரீ:

அஸ்மத் குருப்யோ நம:

ஆழ்வார் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.



# மடத்துக்கு முப்பது.


எழுதியவர் :

சிங்கிரிகோயில், உ. வே. ஸ்ரீமத் அத்தங்கி. திருமலை

குமார சிங்கராசாரிய ஸ்வாமிகளின் திருவடி சம்பந்தியும்,

புதுவை. ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரபோதக

சங்கக் காரியதரிசியும், ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீவைஷ்ணவம்,

ரஹஸ்யத்ரயார்த்தச் சுருக்கம, ஸ்ரீசைலே சதயாபாத்ர வைபவம்,

சேஷத்வம், ப்ரபத்தி, உயர்குலம், பேராளன் பேர்ப்பெருமை

முதலான நூலாசிரியருமான

ஸ்ரீவைஷ்ணவச் செம்மல் ப்ரபந்த வித்வான்,

**புதுவை N. துரைரங்கராமாநுஜ தாஸர்,**

(ரிடைர்ட், பிரெஞ்சு போலீஸ் இன்ஸ்பெக்டர்.)

**சிங்கிரிகோயில், தென்னார்க்காடு ஜில்லா.**


12—12—1951.

ஸ்ரீ :

மடத்திற்கும் மடத்தைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் அறியாதார்க்கும் அடியேன் இன்னானென்பதை விளங்கக் காட்டுவதற்காகவே அடியேனுடைய உருவப்படத்தை இங்குப் பிரசுரிக்கின்றேன். ராமதாஸன் என்றும் பன்றிகுட்டி தாதன் என்றும் அநாமதேயமாக மடம் செய்யும் கீழ்த்தரமான வேலைகளுக்கு இனி அவகாசம் இருக்கக்கூடாது; இராது, உலகமறிந்த பண்டிதர்கள் எழுதுவதில் சங்கிக்க இடமிராது. முக்குகின்றவர் சில சிங்கங்கள் வெளிவந்து கொண்டிருப்பதாக எழுதிவிட்டு ராமதாஸனென்றும் கோமணாண்டி குப்பதாஸனென்றும் பெயரிட்டு நிந்தைக் கந்தைகளை நித்தியமொன்றாக வெளியிடுவதும் இதற்கு உள்வழியில் சப்தத்தாலும் அர்த்தத்தாலும் துணைபுரிவதும் மடத்திற்கு நல்ல பெருமையே. மாதந்தோறும் ஆயிரமாயிரமாகச் செலவுசெய்து வித்வான்களைப் பயிர் செய்கிற மடத்தில் — உலகமுழுக்கும் ஸத்விஷயங்களை வாரியிறைக்கவல்ல ஒரு வித்வான் தோன்றவில்லையே! அந்தோ! ஈதென்ன துர்ப்பிரஷம்.



அடியேன் ஸ்வாமியை ஸேவிக்கவும் நப்பிள்ளை மஹோத்ஸவத்தைக் கண்ணாரக் கண்டு களிக்கவும் கச்சிமாநகர் விடை கொண்டேன். வந்த விடத்தில் வாதவிவாத புஸ்தகங்களைக் காண **நேர்ந்தது.** ஸ்வாமியின் கிருபையினால் அவசியம் எழுத வேண்டியதாகத் தோன்றின விஷயங்களை முப்பது பாராவாக இதில் வகுத்திருக்கிறேன். விரைவில் திருவள்ளூரிலும் வந்து பொதுக் கூட்டங் கூட்டிப் பிரசங்கமாரி பொழிவேன். **பிரபோத பாஸ்கரன்** என்றும் **துர்வாத திமிரபாநு** என்றும் நீசனேனுக்குப் பெரியார்கள் அளித்துள்ள பட்டங்களை ஸ்ரீ வீரராகவப் பெருமாள் திருவுள்ளமுக்கப் பெறுவேனாக. ... ... ... ... ... T. N. J.

Scanned by CamScanner

# மடம் கவனிப்பது.

**இச்சிறு நூலில் பக்கம் 7-ல் "இனி இந்நூலுக்கு உயிரான பாகம்" என்று தொடங்கி ஒன்றரைபக்கம் எழுதியிருப்பதை முன்னம் வாசித்துவிட்டு உடனே இதை வாசித்துப் பிறகு நூலை முழுதும் படிக்க.**

மிகவும் முக்கியமான வார்த்தை. நவீன கோஷ்டியார் ஈட்டுக்கு விரோதமாகவும் தேசிகருடைய சொற்களுக்கும் விரோதமாகவும் பேசுகிறார்களென்கிற விஷயத்தில் பகவானுடைய வ்யாப்தி விஷயம் தலையானது. ஸ்ரீ வைஷ்ணவர்களாகப் பிறந்த யாரும் இதில் போராடுவதற்குச் சிறிதும் நியாயமில்லை. இதை ந்ருஸிம்ஹப்ரியா பத்திராதிபரான ஸ்ரீ வாஸுதேவாசார்ய சுவாமிகள் தாம் நன்றாக கிரஹித்திருப்பதோடு உலகுக்கும் விளக்கேற்றி வைத்துவிட்டார். அப்பெரியார் மடத்திற்கு வலக்கையாயிருந்தவர். உபயவேதாந்தங்களிலும் அவர் கொடுத்தது பிச்சை. நவீனகோஷ்டியாரில் அவர் மிகவும் வெறுப்புடையவர். ஈட்டுக்கு விரோதமாகப் பேசுகிறவர்களைக் கண்டு சகிக்கமாட்டாதவர் அவரொருவரே. நம் அவதாரபுருஷன் அருளிச்செய்த கிரந்தங்களையெல்லாம் பலகால் ஆராய்ச்சிசெய்து இவையே உலகுக்குப் பெருவிளக்காகத் தோன்றிய மஹாக்ரந்தங்களென்று உறுதிகொண்டு அவ்வுறுதியை ஆதியிலிருந்தே வேதாந்ததீபிகையில் அடிக்கடி வெளியிட்டுவந்தார். அவரே பிறகு ந்ருஸிம்ஹப்ரியாவுக்கும் பத்ராதிபராயமைந்து இதிலும் அடிக்கடி நிர்தாக்ஷிண்யமாயும் நிஷ்பக்ஷபாதமாயும் நம் அவதாரபுருஷனுடைய திவ்யக்ரந்தங்களை ஸ்ரீ வைஷ்ணவவுலகுக்கு மஹாநிதியென்று காட்டியிருக்கிறார். அப்போது இந்த மடம் அதையெல்லாம் ஆதரித்திருந்தது. வாயைக் கையைத் திறக்கவில்லை. அந்த மஹான்களை அதிக்ஷேபிக்கவில்லை. அவரை மஹாப்ராமாணிகவக்தாவாகவும் யதார்த்தக்ராஹியாகவுமே கொண்டிருந்தது மடம். அவரைப்பற்றி அதேமடம் இப்போது என்னபேசுகிறது தெரியுமோ? அவர் யார் எப்படி கேட்டாலும் அப்படியேயெழுதிக்கொடுத்துவிடுவர் என்கிறது. அவ்வளவு அசடானவொருவரையா ந்ருஸிம்ஹப்ரியாவுக்கு எட்டு வருஷகாலம் ஸம்பாதகராக்கிவைத்தது மடம்? அந்தோ! ஈதென்ன பாவம்!. நம் அவதார புருஷனுகிய ஒருவரை தூஷிக்கவேண்டி உலகத்தையெல்லாம் தூஷிக்கக் கிளம்புகிறதே மடம். எல்லாரையும் ஏமாந்தவர்களாகவன்றோ மடம் பேசத் தொடங்கிவிட்டதிப்போது. மடம் மடமாக ஏமாந்தபோது மற்றபேர்கள் ஏமாந்துபோகக் கேட்கவேணுமா? புதுக்கோட்டை மஹாராஜஸம்ஸ்தானத்தில் தானுதிகாரியாயிருந்து விச்ராந்தராயிருக்கிற ஸ்ரீமத் காளி ரங்காசார்ய சுவாமிகளும் மடத்தில் மஹாபிமானம் கொண்டவர். இவர் நம் அவதாரபுருஷனுடைய அத்புதஜ்ஞானப்பெருமைகளைப்பற்றி விரிவான வியாஸமெழுதி "பூர்வாசார்ய ஸமுதாயாவதாரர் என்கிற விருதை அடியேன் ஸ்ரீஸ்வாமிக்குச் சூட்டுகின்றேன்; இனி எல்லாரும் இந்தத் திருநாமமிட்டழைத்தே ஸ்வாமியை தெண்டன் ஸமர்ப்பிக்கவேணுமென்றும் ப்ரார்த்திக்கிறேன்" என்று அதில் எழுதி, இப்படி எழுதும்படி தமக்கு ஆழ்வார்களும் ஆசாரியர்களும் நியமனம் தந்ததாகவும் எழுதியுள்ளார். அவரையும் சேர்த்து வையட்டும்.

மடம் ஸத்வாரகமாகவல்லாமல் அத்வாரகமாகவே கிளம்பி நின்றாலுங்கூட *யதந்தரம் ஸிம்ஹஸ்ருகாலயோர் வநே* என்றன்றோ உலகமெல்லாம் திரண்டு சொல்லும். உண்மை அப்படியிருக்க, சில அசட்டுப்பிண்டங்களையும் அஸூயாபுஞ்ஜங்களையும் கிளப்பிவிட்டுக் கீழ்த்தரமான வேலைகளைச்செய்துவருவது ஸகல மஹாபுருஷர்களும் வெறுக்கத்தக்கதே.

எல்லாம் இப்புத்தகத்தில் நன்கு விளங்கும்.

Scanned by CamScanner

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# மடத்துக்கு முப்பது.

மடங்கொண்ட மடம் பணக்கொழுப்பினால் எதை வேணுமானாலும் செய்துவிடலாமெனக் கருதுகின்றது போலும். "காசையாடை மூடியோடிக் காதல் செய்தானவனூர் நாசமாக" என்கிற திருமங்கையாழ்வாருடைய பாடலை நிச்சலும் முச்சந்தியும் ஓதிவருதற்குப் பலன் இப்போதுதான் கைபுகுகின்றதென்பதை மடம் நன்கு அறியட்டும். நித்யம் ஒவ்வொருவர் பெயரால் தூசனக் குப்பைகளை வெளியிட்டுக்கொண் டிருப்பதனால் உலகம் என்ன நினைக்கிறதென்பதைக்கூட கிரகிக்கமாட்டாத மடம் என்ன மடம்! *மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத் துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகமகிழுந் தொண்டர் வாழ அவதரித்த நம் அவதார புருஷன் சமீபகாலத்தில் வெளியிட்டருளின ஸதுபதேச சிக்ஷா முதலிய நூல்களையும் எதிர்த்தலையில் தத்தக பித்தக வென்று மூலை முடுக்குகளினின்று அநாமதேயமாகத் தோன்றிக்கொண்டிருக்கின்ற கந்தைகளையும் கையில் வைத்துக்கொண்டு ஆராய்ச்சிசெய்து, மடமொடுங்க முப்பது வார்த்தைகள் தெரிவிக்கின்றேன் இப்போது. மடம் நல்லுணர்ச்சி யுடைத்தாயின் இதில் காணும் லக்கங்களின் வரிசையாகவே லக்கமிட்டு நேர்மையான வழியில் பதில் தெரிவித்தாகவேண்டும். ஆனால், அதற்குத்தக்க சரக்கில்லை யென்பது உலகமறிந்ததே யாதலால், இன்னமும் கீழ்வழிகளிலேயே கீழ்வெட்டுகளிலேயே காலம் கழிக்கு மென்பது அறிவோம். அப்படியே கழிக்கட்டும். இப்படியும் ஒரு மடமா வென்று அனைவரும் மூக்கில் கையைவைக்கட்டும்.

## முப்பதையும் ஒன்றுவிடாமல் யாவரும் கவனிக்க.

1. ஸ்ரீராமானுஜரால் ஏற்படுத்தப்பட்ட எழுபத்துநான்கு சிங்காசனாதிபதிகளும் ஒரு மடயதியிடத்தே பணிந்து உய்ந்ததாக ஒரு அபத்தம் எழுதப்பட்டதிலிருந்து இந்த விவாதம் வளர்ந்திருப்பதனால் அந்த முதல் விஷயத்தின் உண்மை எவ்வாறு முடிந்ததென்று பார்க்கவேணும். 74 சிங்காசனாதிபதிகளில் மிகவும் பிரசித்திபெற்ற திருவமிசங்கள் யாவும் தென்கலை சம்பிரதாயத்திலுள்ளனவே யன்றி வடகலை சம்பிரதாயத்தில் தேடித்தேடிப்பார்த்தால் மிகச்சிலவே கிடைக்கலாம். "அடியார்கள் வாழ அரங்க நகர்வாழ" என்றும் "ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவா மநுதிநம் ஸம்வர்த்தய" என்றும் இரவும் பகலும் எங்கும் கோஷிக்கும் பெருமைவாய்ந்த தென்னரங்கத்தில் நம்பெருமாள் ஸந்நிதியில்தான் ஸ்ரீராமானுஜர் சிங்காசனாதிபதிகளை ஏற்படுத்தியது. அந்த உலகதிலகமான திவ்யதேசத்தில் நம்பெருமாளுடைய ஒவ்வொரு புறப்பாட்டிலும் ஸ்ரீராமானுஜர் கட்டளையின்படி வரிசையாக நின்று ஆச்சரியமான மரியாதைகளைப் பெறுகிற ஆசார்யபுருஷர்கள் எத்தனைபேர்கள் என்று பார்க்கவேணும். அந்த வரிசையில் வடகலை நாமமிட்ட ஒரு வைஷ்ணவரைக் காட்ட முடியுமா? உடையவர் சிங்காசனாதிபதிகளை நியமித்தபோது இந்த நாமக்காரர் ஒருவர்கூட அந்த பங்க்தியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை யென்பதில் யாருக்காவது சந்தேகமுண்டோ? விவாதமுண்டோ?

Scanned by CamScanner

2. ஸ்ரீரங்கம்மாத்திரமே யல்ல; திருமலைதிருப்பதி, காஞ்சீபுரம் என்று சிறப்பாகக் கூறப்படும் எந்த திவ்யதேசத்தையும் எடுத்துக்கொள்ளலாம். திருமலையிலும் காஞ்சீபுரியிலும் இந்த வேற்று நாமக்காரர் ஒருவரே தீர்த்தவரிசையில் நிற்கிறார். [அவர் என்றைக்கு இந்த நாமமணிந்துகொண்டவர்? முன்னே யிருந்த நாமமெது? என்கிற விசாரணையில் நாம் செல்ல வேண்டா. அது அநாதி நாமமாகவே யிருக்கட்டும்.] கோவில்களை யெல்லாம் சீர்திருத்தி, கைங்கரியங்களை ஏற்படுத்தி, கைங்கரியபரர்களை நியமித்து, மரியாதைகளையும் கட்டளைப்படுத்திய ராமாநுஜர் ஓரிடத்திலாவது நாசிகா சம்பந்த மற்ற நாமக்காரர் ஒருவரையாவது தம்முடைய திருவருளுக்கு இலக்காக்கி யிருப்பது உண்டாவென்று ஊன்றி நோக்கவேணும். இதற்காகக் கோபமுண்டானால் குளத்தில் வீழ்ந்து தணியலாம்.

3. நமது ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் முக்கியமானவர்கள். இவ்வாழ்வாராசாரியர்களின் அவதாரத்தலங்களில் ஒன்றுதப்பாமல் எல்லாம் தென்கலை சம்பிரதாயத்தலங்களாகவே நாளைக்கும் விளங்கிவருவன. அதை நாம் விவரிக்க வேணுமோ? இப்பேச்சில் மாறுபாடிருந்தால் எடுத்துக்காட்ட முன்வரலாமே. இது தவிர ஆங்காங்கு மடாதிபதிகளாகவும், ஸன்னிதிகளின் கைங்கரிய நிருவாகத்திற்கென்றே விளங்குகின்ற யதிகள் யாவரும் தென்கலையார்களே. வானமாமலை ஜீயர், திருக்குறுங்குடி ஜீயர், ஸ்ரீரங்கநாராயண ஜீயர், எம்பெருமானார் ஜீயர், திருமலை ஜீயர்களிருவர், அழகியமணவாள ஜீயர், திருமாலிருஞ்சோலை ஜீயர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஜீயர். எதிராஜ ஜீயர்..........என்றிப்படி வழங்கிவரும் ஜீயர்கள் யாவரும் திவ்யதேச யோகக்ஷேம பரிபாலனத்திற்காகவே நியமனம் பெற்றவர்கள். இப்படி இதரகலையில் ஸன்னிதி பரிபாலனத்திற்கென்று ஒரு யதியும் நியமிக்கப்பட்டிருக்கவில்லையென்பது கண்கூடு. அன்னவர்கள் வாழுமிடம் எல்லாம் ஆற்றங்கரையோரமாகவே யிருக்குமாதலால் கோவில் கைங்கரியங்களுக்கும் அவர்களுக்கும் வெகுதூரமே. துடைக்குமேல் துணிகட்டியிருக்கிறவர்கள் *ஊன்வாட உண்ணாதுயிர் காவலிட்டுத் தாம் வாடவாடத் தவஞ்செய்யும் நிலைக்கு ஒத்தவர்களே யல்லது மேலே காட்டிய ஜீயர்கள் செய்துவரும் கைங்கர்யங்களுக்கு ஏற்றவர்களுமல்ல.

4. மைசூர் பரகால சுவாமிக்கு ஒரு கோவிலுமில்லையென்பது சொல்லவேண்டா. அகோபில சுவாமிக்கு ஒன்றிரண்டு கோவில்களுண்டு. ஆனால் தென்கலையா யிருந்த காலத்திலேயே இந்த ஆதீனம்பெற்றதாக ஸ்ரீராமாநுஜன் தனிமர் 1ல் முடிவில் பிரசுரிக்கப்பட்ட ரிகார்டுகளினால் தேறிவிட்டபடியால் அது கிடக்க. "செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர், தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்" என்ற ஆண்டாள் மங்களா சாஸனத்திற்கு இலக்கான ஜீயர்கள் யாவரும் தென்கலை சம்பிரதாயத்தவர்களே; வடகலை நாமமிட்டவர்களில் ஒருவர் கூடக் கிடையாது.

5. இது தவிரவும், கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார்திருநகரி, திருக்குறுங்குடி, திருநாராயணபுரம், முதலான திவ்யதேசங்களில் ஸ்ரீமந்நாதமுனிகள் காலந்தொடங்கி அரையர் என்று நியமிக்கப்பட்டுள்ளாருடைய திருவமிசத்தவர்களும் தென்கலைத்திருநாம மிட்டவர்களே. ஆகவிப்படி ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞாஸித்தர்களான இவர்களுக்கும் அகோபில சுவாமிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்பதை உலகமறியாதா? மேலும், மிக்க பெருமை பெற்ற இப்படிப்பட்ட சிங்காசனாதிபதிகள் என்னபெருமைகண்டு மடயதியிடத்தில் ஆசிரயிக்கவேணும்? "ஊமைச்சாமியை ஊரெல்லாம் வணங்கும்" என்கிற கதையோ?

Scanned by CamScanner

6. "எல்லீரும்போய் அவர்காலிலே விழுங்கள்" என்று சிங்கவேள்குன்ற நரசிங் கப்பெருமாள் எல்லாருக்கும் சொப்பனமீந்தார் என்கிறார்கள். இவர்களுடைய வம்புக்கூற் றெல்லாம் சொப்பனந்தவிரவேறில்லையென்றுதான் முடிந்தது. அப்படி சொப்பனம் சாதிக் கிற பெருமாள் சைவர், வைணவர். த்வைதிகள், அத்வைதிகள்........என்கிற ஒருவாசியும் பாராமல் உலகுக்கெல்லாம் சொப்பனம் சாதிக்கலாமே. அது பகவானுக்கு முடியாதா? அப்படி சொப்பனத்தாலே சகலமும் சாதித்துக்கொள்ளலாமே. நாட்டில் பிறந்து படாதன பட்டிருக்கவேண்டிய அவசியமே இல்லையே. "இப்படி வீண்வம்புபுரளி செய்பவர்களைச் செருக்கடக்க நீ எழுந்திரு" என்று இச்சிறியேனுக்குச் சிங்கிரிகோவில் சிங்கப்பெருமாள் சொப்பனம் அருளினபடியால்தான் நான் எழுந்தேன் என்கிற உண்மையை உணர்ந்து கொள்க. மடம் வெளியிடுகிற அபத்தக்கதைகளையெல்லாம் ஒன்றுவிடாமல் பொசுக்கியே நிற்குமிந்தச் சிங்கமென்பது திண்ணம்.

7. முக்குகின்றவர் இந்த விஷயத்திற்கு என்ன பதில் சொன்னாரென்று பாருங்கள்: "நாங்கள் கட்டுப்பாடாக இப்படியே சொல்லிக்கொண்டு வருகிறோம்; இப்படிக்கு சுலோக மொன்று இருக்கிறது" என்றெழுதினார். இதற்குமேல் நம் அவதார புருஷன் வெளியிட்ட பதில் என்ன ? "ஸர்வைராசார்ய பீடஸ்தைஸ் ஸர்வைரபி மடாதிபை:, ஸேவிதாங்க்ரி ஸரோஜாய மத்பித்ரே நித்ய மங்களம்." என்று ஒவ்வொருவரும் தனியனிட்டுத் தம் தம் அகங்களிலே கோஷித்துக்கொண்டே யிருக்கிறார்கள் என்று ஸாத்விக ஸதுத்தரத்தில் கூறப்பட்டது. இதற்குமேல் ஏதாவது பதில் வெளிவந்ததுண்டோ? இல்லை. வெளிவரத்தான் போகிறதோ? இல்லை. வசவுமாரிகளே பெய்கின்றன; பெய்யட்டும்.

8. "தேசிக ஸம்பிரதாயத்திற்கே பொருந்தி யிருக்கிற முப்பத்தாறுயிரப்படி வியாக்கியானம்" என்று எழுதினார் முக்குகின்றவர். அதிலிருந்துதான் இந்த விசாரம் மிக விரிவு பெற்றிருக்கிறது. தேசிக ஸம்பிரதாய மென்றால் என்ன? என்பதை நம் அவதார புருஷன் விவரிக்கப் புகுந்து பல தத்துவங்களைக் கொட்டியிருப்பதை உலகம் உகந்து காண்கிறது. வேதாந்த தேசிகருடைய உண்மையான கொள்கைகளை அறவே நீக்கி அவற்றுக்கு எதிரான கொள்கைகளையே கொண்டு அவற்றை தேசிகருடைய கொள்கையாகக் கூறி உலகை வஞ்சித்துவரும் பான்மைக்கு ஆயுள் முடிந்துவிட்டபடியால் இந்த சர்ச்சை இப்போது தலையோங்கி நிற்கிறது.

9. தேசிகருடைய உண்மையான கொள்கைகள் யாவை? உள்ளபடி அவரோடு சம்பந்தமில்லாமல் ஒரு காலத்திலே சம்பந்தம் கொண்டாடத் தலைப்பட்ட புதியார்கள் வெளியிடுகிற கொள்கைகளுக்கு தேசிகருடைய நூல்களில் ஆதாரமிருக்கிறதா? என்று விசாரித்து முடிப்பதுதான் முக்கியமானது. தேசிகர் ஒரே விதமாகச் சொல்லியிருக்கவில்லை யென்றும், ஒன்,ில் ஒரு விதமாகவும் மற்றொன்றில் மற்றொரு விதமாகவும் சொல்லியிருக்கிறார் என்றும் ஆகவே அவருடைய கொள்கையை நிர்ணயிக்க முடியாதென்றும் சொல்லுகிறார்கள்.

10. இதைத் தீர்மானிக்க எனக்குச் சக்தியில்லை யாதலால் இதில் நான் தலையிடத் தகாது. ஆனால், ஒன்றோடொன்று முரண்படும்படியாக தேசிகர் எழுதிவைத்திருக்கிறார் என்பதைப் பலரும் சொல்லுகிறார்கள். திருவள்ளூரில் வெகு காலம் வாழ்ந்திருந்தவரும் வேதாந்த தீபிகைக்கு ஆசிரியராயிருந்தவருமான திவான்பகதூர் டி. டி. ரங்காசாரியர் சுவாமிகள் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸதாசிவய்யரைப்பற்றிக் கண்டனமாக எழுதி வெளியிட்டிருக்கிற ஒரு பத்திரிகையில்,

Scanned by CamScanner

"ஒருவர் விஸ்தாரமாக நூல்களை யெழுதினால் முன்னுக்கும், பின்னுக்கும் விரோதமாக எழுதவே நேர்ந்துவிடும். தேசிகரைப்போல் விஸ்தாரமாக நூல்களை யெழுதியவர் யாரும் கிடையாது. அப்படி யெழுதும்போது முன்னுக்கும் பின்னுக்கும் உதைக்கிற தென்பது ஸம்பாவிதமே." என்று எழுதியிருக்கிறார்.

11. எவ்வளவு விரிவாக எழுதினால் தான் என்ன? ச்ருதப்ரகாசிகையைவிட விரிவாக ஒருவர் எழுதப்போகிறாரோ? அர்த்தங்களைக் குருமுகமாகக் கேட்டு உறுதியாக நெஞ்சில் தேக்கிக் கொண்டிருந்தால் அதை வெளியிடுகையில் முரண்பாடு எப்படி வரும்? ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவம் என்கிற உறுதியுள்ளவர் எவ்வளவு விரிவாக எழுதினாலும் இதற்கு முரணாக ஓரெழுத்தாவது எழுத நேருமோ? அப்படி நேர்ந்திருந்தால், இதர தெய்வங்களைத் தெய்வமாகப் பற்றியிருந்த காலத்தில் எழுதியது ஒன்று; அது தவறென்று தெளிந்த பின்னர் எழுதியது மற்றொன்று என்றுதானே கொள்ளவேண்டும். வேறு வழியேது? புத்தக பேதமில்லாமல் ஒரே புத்தகத்தில் முரண்பட்ட பேச்சுகள் காணப்பட்டால், மூளைகலக்கம்—மதிமயக்கம் என்றுதான் முடிக்கவேண்டியதாகும்.

12. நம் அவதாரபுருஷன் எடுத்துக்காட்டி விளக்கியுள்ள தேசிகர் சூக்திகளைப் பார்த்தால் அவர் நம்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர் முதலான ஸதாசாரியர்களின் வழியையும் அவர்களுடைய சூக்திகளையுமே பின்பற்றியவராகத்தான் சந்தேகமில்லாமல் தெரிய வருகிறது. அவை தேசிகருடைய உக்திகளல்ல என்கிற வாதமாவது, அவற்றுக்கு அது பொருளன்று என்கிற வாதமாவது உண்டாகவில்லை. இப்படி வாதிக்க ஒருவரும் முன் வரவில்லை. அவர் மற்ற இடங்களில் சொல்லியிருக்கிறவைகளையும் தழுவிக்கொள்ள வேண்டாமா? என்கிறார்கள்.

13. எந்த இடத்தில் என்ன சொல்லியிருக்கிறாரென்பதையும் வெவ்வேறிடங்களில் வெவ்வேறு விதமாகச் சொல்லியிருப்பதன் காரணங்களையும், முரண்பாடில்லாமல் பொருந்தினால் அந்த பொருத்தத்தையும் எல்லாரும் நன்கு தெரிந்துகொள்ளும்படி நன்குணர்ந்த பண்டிதர்களைக்கொண்டு எழுதச் செய்து வெளியிடுவதன்றோ மடத்திற்குப் பெருமையாகும். அதைவிட்டு, வையச் சொல்லி ஆள்தேடுவதா அழகு? இது மடம் செய்யத்தகுந்த காரியமா? மடமெங்கே செய்கிறது? யாரோ செய்கிறார் என்னமுடியுமோ?

14. உற்றாருறவினர்களுக்கு அவசியமான தபால் எழுத நேர்ந்தாலும் காகிதம் கிடைக்காமலும் முக்காலணா ஸ்டாம்பு பெற வழியில்லாமலுமிருப்பவர்கள் நித்தியம் ஒரு நிந்தைக்கந்தையை மூலைக்கு ஒருவராக அச்சிட்டு நூற்றுக் கணக்கான ரூபாய்களுக்கு ஸ்டாம்புகள் வாங்கி ஒட்டவைத்து ஊர்தோறும் தேசந்தோறும் அனுப்பிக்கொண்டிருக்கிறார்களென்றால் இது யார் செய்கிற வேலை என்பதைக் கூடவா உலகம் தெரிந்து கொள்ளாது. நம் அவதாரபுருஷனைப் பரம புருஷனாகவே மதித்திருக்கிற ஒவ்வொரு நபருக்கும் தங்களுடைய நிந்தைச் சுவடி எட்டவேணுமென்று இந்த ஒரு ஆவலையே கொண்டு திருவள்ளூர் தபாலாபீசுகளில் ஸ்டாம்பு பஞ்சமாகும்படி இரவும் பகலும் விடாமுயற்சி செய்துவருவது எவ்விதமான பலனைத் தருமென்பதைக்கூட அறியாமை என்னே! "சூரியனிடத்தில் காந்தியில்லை, ஒளியில்லை, அது ஒரு கோசைக்கல்" என்றெழுதி வால்போஸ்டுகள் அச்சிட்டுப் பரமபதம் வரையில் அனுப்பிப் பிரசாரம் செய்யட்டுமே. *செண்பக மல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சிக்களில் மணமில்லை யென்று தெருவு தோறும் கூச்சலிடட்டுமே. ஸ்ரீரங்கநாதன்

Scanned by CamScanner

திருவேங்கடமுடையான் முதலான மூர்த்திகளை வீணாகக் கட்டித்தூக்கி வீதியார வருகிறார்கள், அந்த பிம்பங்களுக்கு என்னதெரியும்? தன்னை யடிப்பவர்களைப் பதிலுக்கு அடிக்கவும், தன்னை வைகிறவர்களை பதிலுக்கு வையவும் தெரியாத பிம்பங்களிடத்தில் என்ன சக்தியிருக்கிறதென்று கோஷிக்கட்டுமே. இப்பேச்சுக்களுக்குக் காதுகொடுக்கிறவர்கள் நன்றாகக் கொடுக்கட்டுமே.

15. மடத்தைச் சேர்ந்த பண்டிதர்கள், பிரபல வித்வான்கள் எத்தனைபேர்களில்லை. அவர்களில் எத்தனையோபேர்களுக்கு அறுபதாண்டு பூர்த்தியாகியிருக்கிறதே. அவர்களுள் ஒருவர்க்காவது மடத்திலிருந்து ஒரு சாயக்கம்பித்துணியாவது சென்றிருப்பதுண்டோ? நம் அவதார புருஷனுடைய அற்புத மஹோத்ஸவத்தைக் கொண்டாடுமதில் பங்கெடுத்துக் கொண்டு மடம் செய்திருக்கிற பணிவிடைகள் கணக்கிலடங்குமா? விலை மதிக்கமுடியாத பட்டுப்பீதாம்பரச் சால்வைகளைப் பரிசனுப்பி, ஸ்ரீகார்யதுரந்தரருட்பட ஆஸ்தான வித்வான்களையெல்லா மனுப்புவித்து, மடத்திலிருந்து மேளதாள வாத்யகோஷ ஸம்பிரமங்களுடன் வெகுமானத்தைப் பெறுவித்து, பல்லாயிரவர் குழுமினமஹாகோஷ்டியிலே ஸ்ரீகார்யதுரந்தரரெழுந்து அழகியசிங்கருடைய அமுதமொழியாக இதைக்கொள்ளவேணுமென்கிற பீடிகையுடன் அவதாரபுருஷனுடைய அரும்பெரும் பெருமைகளைக் கண்ணீர்ப்பெருக்குடன் பொழியச்செய்தது மடம் தோன்றின நாளிலிருந்து வேறொரு நபருக்குச் செய்திருப்பதுண்டா? என்று வினவினால், உண்டு என்று பொய்யாகவாவது ஒரு பதில் சொல்ல முடியுமா? மடத்துக்கணக்கைச் சோதனை செய்யலாமா? உள்ள விஷயங்களை உலகுக்கு வெளியிட்டுவிட்டாரே யென்கிற ரோஷம் உண்டாகி யிருக்கலாம். அதற்காக மிகத்தாழ்ந்தவர்களும் இழியத்தகாத துறைகளிலா இழிவது? தங்களுடைய சாயம் வெளிக்கசியாமலிருக்க வேணுமென்கிற விருப்பமுடையார் அதற்குத்தக்கபடி அடக்கமொடுக்கமாயன்றோ இருந்திருக்கவேணும். அறிவின் சுவடே இன்னதென்றறியாதவர்களையிட்டு அர்த்தமில்லாத வார்த்தைகளை வெளியிடுவித்தால் அதற்கொரு பலனில்லாமல் எப்படிபோகும்? இவர்கள் எழுதினவற்றைப் பிறர் எழுதியிருந்தால் அப்போது இவர்கள் வாளா இருப்பர்களோ? மட ஜீயர்க்கு ஒரு தாழ்வை இவர்கள் சகிக்கமாட்டார்களாம். உலகத்தையே பழிக்குமதை உலகம் சகித்திருக்கவேணுமாம். உலகமெல்லாம் ஒரு மடயதியிடம் பணிந்ததென்றால் இதற்கு என்ன அர்த்தம். இதைவிட வேறுபழிப்புண்டோ?

16. கோபதாபங்களினால் எதை வேணுமானாலும் சொல்லிவிடுவது, எழுதிவிடுவதென்றுண்டோ? நம் அவதாரபுருஷன் ஆயிரக்கணக்கான வித்வான்களிடம் பங்கப்பட்டார் என்று பறைசாற்றிவிட்டால் உலகம் மயங்கிவிடுமோ? இருளினிடத்தில் இரவி தோற்றொழிந்தான் என்று ஒருவன் கூச்சலிடுவதற்கும் இதற்கும் ஒரு வாசியுண்டோ? யார் யார் எதற்காக எவ்விதமாகப் பங்கப்பட்டிருக்கிறாரென்பது உலகுக்குத் தெரியாமலா இருக்கிறது? ஒரு ரிகார்டு மில்லாமல் வாதிக்கிறவாதமானால் எதையாவது சொல்லி ஏய்ச்சுவிடலாம், அசைக்கமுடியாத ரிகார்டுகளைத் தாக்கல்செய்து செய்யும் வாதத்தில் எதிரிடையாக எந்த சதுர்ப்புஜன் வந்து என்ன அட்டகாசம் செய்தாலும் ஏமாந்தவன் கொடுக்கிறபீஸை வாங்கி ஜோப்பியில் அமுக்கிக்கொண்டு போகலாமே தவிர நீதிபதிகளின் கண்ணில் மண்ணைத்தூவமுடியாதென்பதில் சந்தேகமுண்டோ? நம் அவதார புருஷனுடைய வாதம் ஓங்காதபடி அடக்கிவைத்த ஒரு வ்யக்தி இவ்வுலகில் இருக்குமானால் *குத்ரேதி நஜ்ஞாயதே யென்னும்படியிருக்கிற அந்த வ்யக்தியை அறிமுகம் செய்யலாமே. அதற்கு வழியில்லாமல் எதுக்கு வீண் வம்புப் பேச்சுகள்?



Scanned by CamScanner

17. ஸ்ரீரங்கம் பண்டித சுவாமி அமுதிலு மாற்றமினிதாக வெளியிட்டருளியுள்ள மடவித்வத் விபூஷணத்தில் திருவஹீந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசார்ய சுவாமிகளுடைய மன்னிப்புக் கடிதம் வெளியிடப்பட்டிருக்கிறது. அது கற்பனையான கடிதமென்று எழுதிவிட முடியவில்லைமடத்திற்கு. ஒப்புக்கொள்ளவேண்டியது தலைப்பொறையாய்விட்டது. ஏதனுலென்னில்: அந்த மன்னிப்புக் கடிதம் முதன் முதலாக இப்போது வெளியிடப்பட்டதன்றே. அந்த சேட்லூர் சுவாமிகளின் ஜீவித காலத்திலேயே அச்சாகி வெளிவந்தது. அது வெளிவந்த பின்னர் அந்த சேட்லூர் சுவாமி 6, 7 ஆண்டுகள் ஜீவித்திருந்தார். அந்த ஜீவதசையில் அந்த மன்னிப்புக் கடிதம் ஒரு புத்தகத்தோடு நில்லாமல் பல புத்தகங்களிலும் பிரகாசம் பெற்றது. அதற்கு ஏதாவது மறுப்பு எழுதவேணுமென்று அந்த சேட்லூர் சுவாமிகளைப் பலர் தூண்டியும் அவர் இசையவில்லை. "ஒரு மன்னிப்புக் கடிதத்தோடு போகாமல் இன்னமும் பல மன்னிப்புக் கடிதங்களுக்கு வழிவைக்கிறீர்களோ?" என்றே பதில் சொல்லிவந்தார் என்பது நாடறிந்த விஷயம். இது இப்போதாக நாம் எழுதுவதன்று. அப்போது திருப்பாப்புலியூர் ஸ்ரீநிவாஸராமாநுஜார்யர் வெளியிட்ட சேட்லூரார் சிறப்பில் முகவுரையிற் காணலாம். அதையும் பார்த்துக்கொண்டே அவர் பல வருஷங்கள் ஜீவித்திருந்தார். உண்மை யிப்படி யிருக்க அஸம்பத்தமாக எழுதிக்கொண்டிருப்பதனுல் யாரே மயங்குவார்?

18. அவருடைய மன்னிப்புக் கடிதம் முதன் முதலாக அச்சாகி வெளிவந்தது எந்த வருஷத்தில்? அவர் விண்ணுல கெய்தியது எந்த வருஷத்தில்? இடையில் எவ்வெவ் விதமான பிரசுரங்கள் வெளியாகியிருக்கின்றன? என்னுமிவற்றை ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்யத் தருணம் நேராமற் போகாது. இதைப்பற்றி விமரிசை செய்ய மடம் ஊக்கங்கொள்ளுகிறதா? அந்த விவாதப் புத்தகங்களெல்லாம் சகலமடங்களிலும் புத்தகசாலைகளிலுமுண்டே. நம் அவதார புருஷன் அந்த சேட்லூர் சுவாமிகளுக்கு ஏதோ ஸ்ரீமுகம் சாதித்திருந்ததாக அவருடைய மன்னிப்புக் கடிதத்தில் காண்கிறதாம். ஆதலால் அந்த ஸ்ரீமுகம் வெளிவரவேண்டுமென்கிறது மடம். இதுவும் ஒரு மடமே. அந்த ஸ்ரீமுகத்தில் எதிர்த்தலைக்குத் துளியவிழ் இருந்தாலும் அப்போதே ஆர்ப்பாட்டம் செய்திருக்குமே. என்றைக்கோ மறைந்து போனவருடைய கதை இன்றைக்கு ஏன்? நாளைக்கும் ஜீவித்திருக்கும் மஹானுடைய மன்னிப்புக் கடிதமும் மதிப்புரையும் மேலே பிரசுரமாகிறது; அதைக் கண்டு வயிற்றையோ தலையையோ தடவிக் கொள்ளட்டும் மடம்.

19. ஸ்ரீமடஸௌபாக்யத்தில் ஸ்ரீமான்களான வி.வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்சுவாமிகள், ஸர். எஸ். வரதாசார்ய சுவாமிகள், D. இராமஸ்வாமி ஐயங்காரவர்கள் ஆகிய மூவருடைய அமுதமொழிகள் எடுத்துக்காட்டப்படுமிடத்து இந்த வாசகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன: "இவற்றுக்கு அப்படி கருத்தன்று, இப்படி கருத்து என்று விதூஷகர் வியாக்கியானம் செய்ய விரும்பினுலும் செய்யட்டும்; அவர்கள் இதில் சம்பந்தப்படவேயில்லை, பொய்யாக வெளியிடப்படுகிறது என்ருவது எழுதட்டும்" என்று. இதன்மேல் வந்திருக்கும் மட பதிலையாராய்வோம்.

20. எத்தனையோ விஷயங்களுக்கு இவர்கள் பதில் சொல்லாமலே யிருந்துவிடுவது போல இதற்கும் ஒரு பதிலு மெழுதாமலிருந்திருக்கலாம். ஆனுல், பகவான் அப்படி யிருக்க வொட்டவில்லையே. சூர்ப்பணகை, தாரை, மந்தோதரி முதலானர் வாயிலிருந்தும் பெருமாளுடைய உண்மையான பெருமை வெளிவந்ததுபோல இவர்களுடைய கையிலிருந்தும் உண்மையேதான் வெளிவந்திருக்கின்றது. இதைப்பற்றி இங்குச் சிறிது விரிவா

Scanned by CamScanner

கவே பெழுத விருப்பம். மடத்தின் சாரார் என்ன எழுதுகிறார்க ளென்றால், "மதிப்புரைக
ளெல்லாம் இவருடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி மலரில் பெரிய எழுத்தில் நல்ல பேபரில் வெளியி
டப்பட்டிருக்கிறது. அதை எல்லோரும் பார்த்திருக்கிறார்கள். இவருக்கு யோக்யதை இல்லை
யென்றோ, இவர் உபந்யாஸம் செய்ய சக்தி யற்றவரென்றோ, பூர்வாசார்ய க்ரந்தங்களை
ப்ரகாசநம் செய்யாதவரென்றோ எவரும் எழுதவில்லையே. இவருடைய பாடசாலையைப்
பற்றியும் பாராயணிகளைப் பற்றியும் கொண்டாடப்பட்டுத்தான் வருகிறது." என்று
தலைவிதியாக எழுதிவிட்டு, இதன்மேல் எழுதுவதைப் பாருங்கள்: "ஒரு தகப்பன் தன்
மகனைக் கொண்டாட வேண்டிய காலத்தில் கொண்டாடுகிறார். அந்த மகனே சில நாள்
பொறுத்து பிறர் பழிக்கும்படியான காரியங்களிலீடுபட்டால் அந்த பிதா என்ன செய்வார்?
அவனை நிந்திப்பது மட்டுமன்றி ஸம்ஸர்க்கத்தையே விலக்கி விடுவார்; இதுதானே லோகத்
தில் நடப்பது. அது போல" என்று ஆகாயப்பந்தலாக எழுதுகிறார்கள். இங்கே பிதா
வின் ஸ்தானத்தில் யார்? மகன் ஸ்தானத்தில் யார்? என்பதை இவர்களே சிறிது விவரிக்
கட்டும்.

21. நம் அவதார புருஷனையே மகன் ஸ்தானத்தில் வைத்து எழுதியிருக்கிறார்கள்
என்பதில் சந்தேக மில்லை. அந்த அவதார புருஷனைப் பலமுகமாக கௌரவித்துவரும் உலகத்
தையே பிதாவின் ஸ்தானத்தில் கொண்டிருக்கிறார்க ளென்பதும் அசைக்க முடியாதது.
அந்த பிதா இந்த மகனிடத்தில் நேற்றும் இன்றைக்கும் நாளைக்கும் எவ்விதமாக நடந்து
கொண்டிருக்கிறார் என்பதைத்தானே பார்க்க வேண்டும், பார்த்தால் இவர்களுடைய
ஊத்தைவாய்ப் பிதற்றல் காசு பெறுமா? இவர்களே போற்றும் அட்வொகேட் D. இரா
மஸ்வாமி ஐயங்கார் என்ன எழுதியிருக்கிறார் என்பதை உலகம் மறக்க முடியாதே. அவர்
தேங்கா யுடைத்தாற்போல் எழுதி உலகமெங்கும் பரவவிட்டிருப்பதில் உயிரான வார்த்தை
கள் இவை: "P. B. A. ஸ்வாமி வாத க்ரந்தங்கள் எழுதுகிறாரென்பது நிற்க; ஸ்ரீவைஷ்ண
வத்திற்காக ஸ்வாமி செய்திருக்கும் செய்துகொண்டிருக்கும் பணி கணக்கிடமுடியாதது.
நம் தேசமெங்கும் ஆயிரக் கணக்கிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் இவருக்கு மேன்மேலும்
வணங்கிக்கொண்டும் நன்றி செலுத்திக்கொண்டுமிருக்கின்றனர்." என்று எழுதியிருப்ப
தோடு "அசூயையும் பொறாமையுங்கொண்டு பலதிக்கிலிருந்தும் பலர் தூஷணைகளை எழுதிக்
கொண்டேயிருப்பர்கள்; அதனால் ஸ்வாமியினுடைய தேஜஸ்ஸுக்கு ஒரு குறையும் வாராது"
என்று கல்வெட்டாக எழுதியிருப்பதை இவர்கள் இரவும் பகலும் எடுத்தெடுத்துப்பார்த்துக்
கூட அந்த அட்வொகேட்டின் திருவாக்கை மெய்ப்பிக்கவேண்டியே தங்களுடைய
அசூயையையும் பொறாமையையும் பரவச் செய்துகொண்டு வேலை செய்து வருகிறார்கள்.

## இனி இந்நாலுக்கு உயிரான பாகம்.

22. ந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகை இதுவரை நம் அவதாரபுருஷனிடத்தில் எவ்விதமாக
நடந்துவந்ததென்பதை உலகம் நன்கறிந்தேயுள்ளது. ஆனாலும் சிறிது ஞாபகப்படுத்துகி
றேன். பகவானுடைய வ்யாப்தி விஷயமாக நவீனகோஷ்டியார்கள் ஈட்டுக்கு விருத்த
மாகப் பேசுகிறார்களல்லவா? இவ்விஷயத்தில் ஸ்ரீமான் டி. டி. தாதாசாரிய சுவாமிகள்
ஸர்வசக்தி யென்றொரு சிறுபுத்தகமெழுதினார். அதற்கு மறுப்பாக நம் அவதாரபுருஷன்
அத்புதசக்தியென்றொரு திவ்விய நூல் அருளிச்செய்தார். இவ்விரண்டும் ந்ருஸிம்ஹப்ரியா
பத்ராதிபரிடம் சென்றன. அவர் மிகவும் பிராமாணிகராய் ஆராய்ந்து டி. டி. தாதாசார்ய
ருடைய புத்தகத்தை ஒரு பதார்த்தமாகவும் நினையாமல் தள்ளிவிட்டு நம் அவதாரபுருஷ
னுடைய அத்புதசக்திநாலையே கொண்டாடியிருக்கிறார் ஸர்வஜித்ஹு மாசிமீ பத்ரிகையில்.

Scanned by CamScanner

புதிய கோஷ்டியார்களின் கொள்கையை நம்ஸ்வாமி கண்டித்தெழுதிய
அத்புத சக்தி யென்கிற சாஸ்த்ரார்த்த நூலை ந்ருஸிம்ஹ ப்ரியா .
கொண்டாடி யெழுதியிருக்கிற வியாஸம் வருமாறு:—

"**அத்புதசக்தி:**—இதனை இயற்றியவர் ப்ரதிவாதிபயங்கரம் வித்வான் ஸ்ரீ. உப.
அண்ணங்கராசார்ய ஸ்வாமி. விஷயம்:—எம்பெருமான் எங்கும் நிறைந்துள்ள பரம்ஜோதிஸ்
என்று வேதங்கள் கூறுகின்றன. அதாவது: மஹத்தான பதார்த்தங்களின் வெளியிலும் அணு
வான பதார்த்தங்களினுள்ளும் அவன் நிறைந்துளன் என்று சொல்லப்பட்டதாயிற்று. இது எப்
படி ஸாத்யம்? அணுவான பதார்த்தங்களுக்கு உட்புறம் என்று வகுத்துக்காட்டக்கூடிய இடம்
இல்லையே. அங்கு அந்தர் வியாப்தி எப்படி? அம்மாதிரியே மஹத்தான பதார்த்தங்களில் பஹிர்
வ்யாப்தி என்று சொல்வது ஸாத்யமில்லையன்றோ! ஆகையால் வேதாந்திகளின் கொள்கையை
ஒப்புக்கொள்ள இயலாது. இவ்வாறு ஆக்ஷேபமொன்று உண்டு. நிற்க: பகவானுடைய
ஸ்வரூபம் முழுவதும் ஒரு பதார்த்தத்தில் வ்யாபித்திருக்கிறதென்று சொல்லிவிட்டால் மற்றும் உல
கிலுள்ள வஸ்துக்களிலும் இது இருக்கிறதென்று எப்படிச் சொல்லக்கூடும்? இது மற்றுமொரு
ஆக்ஷேபம். இம்மாதிரியான ஆக்ஷேபங்களுக்கு 'எம்பெருமானுக்கு அத்புதமான சக்தி உண்
டாகையால் இவை பரஸ்பர விருத்தமாக இருந்தாலும், அவன் விஷயத்தில் அது இயலும்'
என்று ஸமாதாநத்தை சாஸ்த்ரங்களே கூறுகின்றன. இந்த அத்புதமான சக்தி என்பதன் பொருள்
என்னவென்னும் விஷயத்தில் வைஷ்ணவர்களுள் விவாதமுண்டு. அப்படி விவாதிக்கும்
இரு கக்ஷிக்காரர்களுள் எவர்களுடைய கக்ஷி இருகக்ஷிக்காரர்களுக்கும் பொதுவாக இருக்கின்ற
ஆசார்யர்களுக்கு அபிமதம் என்பதை இந்நூல் விசாரிக்கின்றது. ..இதை மிக்க ரஸத்துடன் ஸ்ரீ
அண்ணங்கராசார்ய ஸ்வாமி விசாரித்திருக்கிறார். ரஸிகர்கள் இதைப் படித்து ஆநந்தப்படக்கூடும்.
இதன் விலை அணா எட்டு. இதனை 'ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி சின்ன காஞ்சீபுரம்' என்
னும் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீ. ந்ரு. ப்ரியா ஸம்பாதகர்," என்று
வெளிவந்துள்ளது.

இந்த மதிப்புரையில் "இம்மாதிரியான ஆக்ஷேபங்களுக்கு எம்பெருமானுக்கு அத்புத
மான சக்தியுண்டாகையால் இவை பரஸ்பர விருத்தமாக இருந்தாலும் அவன் விஷயத்தில்
அது இயலுமென்று ஸமாதானத்தை சாஸ்த்ரங்களே கூறுகின்றன" என்றுள்ள வாக்
கியமானது மிகவும் ஸாரமானது. நம் ஸ்வாமியின் அபிப்ராயமே தமது திருவுள்ளமாகவும் இங்
குப் பிறருடைய வாதங்கள் வம்பேயாகவும் ஸ்பஷ்டமாக வெளியிடப்பட்டதன்றோ. இவற்றால்
ஸ்வாமியின் வாதக்ரந்தங்களெல்லாம் மத்யஸ்தர்கள் மெச்சும்படியான வகையிலே அமைந்திருக்
கின்றனவென்பது அறியலாகும். இந்த மதிப்புரையும் இதுபோன்ற பல மதிப்புரைகளும்
ஸ்வாமி விரும்பி வெளிவந்தவையல்ல. ப்ராமாணிகப்பொருளை மறுத்தும் மறைத்தும் அப்ராமா
ணிகப் பொருள்களைச் சிலர் பரவவிடுகிறார்களேயென்கிற நிர்வேதம் தாங்கமுடியாமல் அவரவர்
தாமாகவே கனிந்த நெஞ்சினராய் வெளியிடுகிறார்களென்பது சொல்தொடையில்தானே எளிதிற்
புலனாகும்.

*இவ்விஷயங்களெல்லாம் பண்டிதர்களுக்கு மிக நன்றாய்த் தெரிந்திருப்பவை. ஒரு
வரும் மறக்கமுடியாது. ஆனாலும் அவற்றையறியாமலிருக்கின்றவர்களுக்கும் அவற்றை
விசதப்படுத்தவேண்டியே இப்போது மடம் அஸங்கதமான நிந்தைகளில் இறங்கியிருக்
கிறது. இனி விஷயத்தில் செல்லுவோம்.*

Scanned by CamScanner

23. பிதாவையும் புத்திரனையும் திருஷ்டாந்தமாகக் காட்டியெழுதினவர்கள், எந்த பிதா கொண்டாடினானோ அந்த பிதாவே திரஸ்கரித்ததாகக் காட்டித் தீரவேண்டும். பிரபல வித்வான்களும் ஸகல ஜட்ஜுகளும் அகில மினிஸ்டர்களும் கொண்டாடினதாகக் காட்டிவிட்டு அப்படி கொண்டாடினது யுக்தந்தானென்றும் யோக்யதையிருந்துதான் கொண்டாடினார்களென்றும் இசைந்துவிட்டு, தூஷிப்பதற்கு நாங்களேபிறந்திருக்கிறோமென்று நிரூபணம் செய்கிறார்கள். எந்த எந்த மஹான்களுடைய மதிப்புரைகளை இவர்களே யதார்த்தமென்று ஒப்புக்கொள்ளுகிறார்களோ அவர்களெல்லாரும் பெரும்பாலும் ஜீவித்திருக்கிறார்களேயொழிய மறையவில்லை. அவர்களிடத்தில் இவர்கள் தங்களுடைய தூர்வாதங்களுக்கு ஒரு மதிப்புரை ஓரெழுத்தாவது வாங்கமுடியுமோ? மதிப்புரைகளைக் கொள்ளை கொள்ளையாக வெளியிட்ட மஹாநுபாவர்களெல்லாரும் ஸ்வாமியினிடத்திலே எவ்விதமான பெருமையைக் கண்டு மதிப்புரை மாலைகளைச் சாத்தினார்கள் தெரியுமோ? "துஷ்ட மதங்களையும் தப்புப் பேச்சுக்களையும் ஸ்வாமி நிர்தாக்ஷிண்யமாகக் கண்டித்து நன்னெறியை ஸ்தாபிக்கிறவர், இதில் சிறிதும் பின்வாங்கமாட்டார்; கடைசிவரையில் நின்று கண்டன மண்டனங்களைச் செய்தே தீருவர்" என்கிற பெருமையைக் கண்டே. இதை நாம் வியாக்கியானம் செய்யவேண்டியிருக்கிறதோ? D. ராமஸ்வாமி ஐயங்காரவர்கள் தம்முடைய மதிப்புரையில் இதையன்றோ உயிர்நிலையாக வைத்திருக்கிறார். அவருடைய வியாஸம் பெரிய ஜட்ஜ்மெண்டல்லவா? லாரிபோர்ட்டல்லவா?

24. பகவான் ஸாது பரித்ராணம் செய்வதுபோல துஷ்க்ருத்விநாசனமும் செய்கிறார். துஷ்ட சிக்ஷணம் பண்ணாமல் சிஷ்டபரிபாலனம் செய்யமுடியாது. ஸ்வாமி இந்த துஷ்ட சிக்ஷணத்திலேயே தம்முடைய காலத்தை அதிகமாகச் செலுத்தியிருக்கிறாரென்றால் இது பூஷணமாகுமேயொழிய தூஷணமாக எப்படியாகும். ஸ்ரீராமாயணத்தில் இராமசந்திரன் மாமுனிவர்களை நோக்கி உங்களது சத்துருக்களையெல்லாம் நான் தொலைத்தொழித்துவிடுகிறேன். அதற்காகவே வந்திருக்கிறேன் என்று வாக்தானம் செய்தருளினதை வான்மீகி முனிவர் ஆரணிய காண்டத்தில் ஆறாவது ஸர்க்கத்தில் கூறி, உடனே ஒன்பதாவது ஸர்க்கத்தில், இராமன் அப்படிச் செய்த வாக்தானத்தை ஸீதாபிராட்டி மிகக் கடுமையாகக் கண்டித்ததாகவும் கூறினார். அடுத்த பத்தாவது ஸர்க்கத்தில், அங்ஙனம் பிராட்டி கண்டித்துக் கூறினதை இராமன் ஏற்றுக்கொள்ளாமல் துஷ்டசிக்ஷணம் அவசியம் செய்யவேண்டியதேயென்று கல்வெட்டாகத் தாபித்துப் பேசினதையும் கூறினார். இராமனுடைய அந்த ஸித்தாந்தத்தைப் பிராட்டி ஏற்றுக்கொண்டாளா? இவர் வீண் பிடிவாதக்காரர் என்று வெறுத்தேயிருந்தாளா? என்பது நமக்குத் தெரியவேண்டுமே. இதை வான்மீகி முனிவர் எவ்வளவு அழகாகத் தெரிவித்திருக்கிறார் பாருங்கள்; கரதூஷண வதம் முடிந்தபிறகு பிராட்டி இராமனுக்குச் செய்த பஹுமானத்தைக் கூறுகின்ற வான்மீகி முப்பதாவது ஸர்க்கத்தின் முடிவில் * தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம், பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே * என்று வெகு ஆச்சரியமாகக் கூறினார். பெருமாள் துஷ்ட சிக்ஷணம் பண்ணி ஸாதுக்களை வாழ்வித்ததுபற்றிப் பிராட்டிக்கு உண்டான ஆனந்தம் வாசாமகோசரமாகி இராமனைப் போர்க்களத்திலேயே ஆரத்தழுவியதாகப் பேசினார். இவ்விதமாகவன்றோ நமது அவதார புருஷனும் அடிக்கடி துஷ்ட வாதநிரஸனங்களினாலே துஷ்க்ருத்விநாசனத்தைப் பண்ணி இதற்காகவே உத்தம புருஷர்களின் ஒப்புயர்வற்ற வெகுமதி



Scanned by CamScanner

களையும் மதிப்புரைகளையும் பெற்றுவந்திருக்கிறார், பெற்றுவருகிறார். உண்மையில் ராமக்ருஷ்ணாதி அவதாரங்களைச் செய்து பகவான் அரக்கரசுரர்களைக் களைந்திராவிடில் தரும நெறி குலைந்தேயிருக்குமன்றோ. அப்படியேதான் நம் அவதார புருஷன் தோன்றி அப்போதைக்கப்போது சிறிதும் சோம்பாமல் துர்வாதங்களையெல்லாம் வேரறுத்துக்கொண்டு வருவதனுலன்றோ ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தமும் ஸத்ஸம்பிரதாயமும் செழித்து விளங்குகின்றது.

25. இது, புல்லியனான நான் ஒருவன் சொல்லுமதன்று. உலகம் போற்ற விளங்கும் பெரியார்கள் யாவரும் இதைத்தானே தங்கள் மதிப்புரைகளில் உயிராக வைத்திருக்கிறார்கள். டில்லிமா நகரப் பெரியார் S. R. S. ராகவன் அவர்கள் இங்கிலீஷில் எழுதி அற்புதமாக வெளியிட்டிருக்கும் மதிப்புரையில் இந்த வாசகங்களைக் காணலாம்.

"Sri P. B. Annangaracharya, as Sri Vedanta Desikar has shown himself to be in his works like Satha Dushani, is a strong Controversialist. But he will enter into a Controversy only on important matters and again only when absoutely necessary. On such oacasions he is never afraid to be hif hard, nor does he hesitate to hit back with vigour and persistency, and with arguments which will never fail to convince and carry the world with him as is evident in the recent controversy over Paranda Rahasyam."

இதன் பொருளாவது, "ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் சததூஷணி முதலான வாதக்ரந்தங்களையும் எழுதியிருப்பதுபோல் நம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியும் வாதக்ரந்தங்களையும் எழுதுவதிலும் மிக்க ருசியும் வல்லமையுமுள்ளவர். மிகவும் அவசியமான விஷயங்களிலேயே ஸ்வாமி வாதக்ரந்தங்கள் எழுதியுள்ளார். அவ்வாதங்களில் பிறர் கடினமாகத் தாக்கினாலும் ஸ்வாமி சிறிதும் அஞ்சமாட்டார்; ஒழுங்கு தவறாமல் எதிர்வாதங்களை யெழுதி தன் வாதங்களையே உலகம் மெச்சும்படியாகச் செய்துகொள்வது இவருடைய இயல்பு. ஸமீபகாலத்தில் பரந்த ரஹஸ்யமென்கிற க்ரந்த விஷயமாக நடந்த சர்ச்சையே இதை நன்கு விளக்கும். ஆனாலும் இவர் ஹ்ருதயபூர்ணமாக சமாதானத்தையும் ஒற்றுமையையுமே விரும்புபவர்."

26. இப்படியெழுதி நம் அவதார புருஷனைக் கொண்டாடியிருப்பவர்கள் ஒருவரா? இருவரா? ஆயிரவரன்றோ. அவரவர்கள் வெளியிட்டுள்ள புகழ்மாலைகளை ஒன்றுவிடாமல் வாசித்திருப்பதாகவும் இம்மடப் புலவர்கள் கம்பீரமாக எழுதிக்கொள்ளுகிறார்கள். பெரிய எழுத்தில் நல்ல காகிதத்தில் அச்சிட்டிருப்பதாகவுமெழுதுகிறார்கள். அருமையினால் அவற்றிலுள்ள பொருள் நெஞ்சிற் படுவதில்லை. பிறர் வெளியிட்ட புகழ்மாலைகள் கிடக்கட்டும். ஸமீபகாலத்தில் மடங்களோடு மடமாகக் கூடிக் குலாவிச் செய்த பஹுமானங்கள் எதற்காகச் செய்தவை? துர்வாத கண்டனங்களை அப்போது நம் அவதாரபுருஷன் செய்திருக்கவில்லையா? அவசியமேற்படுகிறபோதெல்லாம நாற்பது வருஷ காலமாகச் செய்துவருகிற பணியல்லவா இது. இதற்கு மனமார உகந்திருந்த மடந்தானே. ஆனாலும இப்போது சொல்லுகிற வார்த்தையென்னவென்றால், ஸ்வாமி இதுவரையில் செய்த துர்வாத நிரஸனங்கள் யுக்தமே;

Scanned by CamScanner

அவற்றுக்காக உகக்கவேண்டியது அவசியமே. நாங்களெல்லாரும் அவற்றுக்கு 10-10-1951 வரை உகந்தேயிருந்தோம். அந்தவுகப்பினால்தான் ஸ்வாமியின் மஹோத்ஸவத்திற்கு நாங்களெல்லாரும் திரண்டுவந்து விசேஷ பஹுமானங்கள் செய்தது. ஸ்ரீராமானுஜன் தனிமலரில் ஸதுபதேச சிக்ஷையும் ந்ருஸிம்ஹப்ரியா ஸமீக்ஷையும் வெளிவந்தபிறகே எங்கள் மனம் விகாரப்பட்டுவிட்டது என்று. இதனால் இப்போது உண்மை வெளிவந்துவிட்டது என்றறியலாம். தங்களுடைய கந்தல் பொந்தலான ஊழல்களை ஸ்வாமி வெளியிட்டுவிடவே தங்களுக்குக் கோபதாபங்களுண்டாகி நிந்தைகளைச் சரமாரியாகப் பொழியத் தொடங்கிவிட்டதாய் இவர்கள் வாயிலிருந்தே இப்போது வெளிவந்துவிட்டதை உலகமுணரவேணும்.

27. எங்கும் அடிபடுகிறவன் அடிதாங்கமுடியாமல் வைவதுண்டு; அதில் ஆச்சரியமில்லை. யார்யாருடைய துர்வாதங்களை நம் அவதார புருஷன் நிலைநின்று நிர்தாக்ஷிண்யமாகக் கண்டனம் செய்தருளியிருக்கிறாரோ அந்த நபர்களே கோபதாபங்கொண்டு நிந்திப்பவர்களென்றும், துர்வாதங்களைச் செய்யாமலும் தப்பும் தவறுமாக எழுதாமலும் நன்னெறியில் வாழுகின்ற நல்லார்களனைவரும் அன்றுதொட்டு இன்றுவரையில் ஸ்வாமியினிடத்தில் ஒரேவிதமான கௌரவ புத்தியுடனும் மதிப்புடனும் மகிழ்ச்சியுடனுந்தான் வாழ்ந்துவருகிறார்கள் என்றும் இந்த உண்மையை இவர்களே வெளியிட்டவர்களாயினர். ஸ்வாமியால் கண்டனம் பெற்றுப் பங்கமடைந்தவர்களுங்கூட *யதார்ஹம் கேசவே வ்ருத்திம் அவசா: ப்ரதிபேதிரே* என்ற ரீதியில் தாங்கள் பரவசர்களாயிடுபட்டிருப்பதை உலகம் காண்கிறது.

28. திருச்சினாப்பள்ளியில் வாழும் ஸ்ரீமத் A. V. கோபாலாசார்ய ஸ்வாமிகள் மஹாமேதாவியாய் பல நூல்கள் இயற்றி வெளியிட்டவராய் எண்பது வயது சென்றவராய் உலகமெல்லாம் போற்றப்பெற்று விளங்குகின்றார். இவர் ஆதியிலிருந்து நம் அவதார புருஷனிடத்தில் மிகுந்த கௌரவப்ரதிபத்தியுடன் வாழ்ந்தவர். இடையில் சிலருடைய மாயவலையில் அகப்பட்டு ஸ்வாமியோடு க்ரந்தமூலமாக விவாதப்பட்டார். 1934, 35 ஆகிய இரண்டு வருஷங்களில் இருவர்க்கும் க்ரந்தமூலமான வாத விவாதங்கள் அடுத்தடுத்து நடந்தன. அப்போது நம் ஸ்வாமி ஸ்ரீ தேசிகஸூக்தி ஜயத்வஜமாலா என்கிற பெயருள்ள மாத ஸஞ்சிகையொன்று நடத்திவர நேர்ந்தது. அதில அந்த ஏ. வி. கோபாலாசார்யஸ்வாமியின் வாதங்களுக்குக் கண்டனங்களே விசேஷமாக வந்துகொண்டிருந்தன. அந்த விவாதம் எவ்விதமாக சாந்தமாயிற்று தெரியுமோ? யுவஹூ ஆவணி மாதத்தில் ஸ்வாமி வெளியிட்ட ஸஞ்சிகையில் அது வ்யக்தமாக இருக்கிறது. அதையெடுத்துக் காட்டுகிறேன். 1935 ஆனி மாதத்தில் ஸத்யநாராயணஸ்த்ரம் என்கிற ஒரு க்ரந்தத்தை ஸ்வாமி வெளியிட்டிருந்தார். இது, ஸ்வாமியின் குலகூடஸ்தருடைய திக்கஜத்வஸ்தாபகமாகத் தோன்றிய க்ரந்தங்களுள் ஒன்று. இதை ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி ஞாயிற்றுக்கிழமை விடுமுறையில் பூர்த்தியாக வாசிக்கப்பெற்றாராம். உடனே ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளி அங்குப் பல வித்வான்கள் கூடியிருந்தவிடத்தில் அந்த க்ரந்தத்தைப்பற்றித் தாம் பரவசமாகப் புகழ்ந்து பேசினதாகத் தெரிவித்த ஸ்ரீமுகத்தில் [நம் ஸ்வாமிக்கு அவர் எழுதிக்கொண்ட கடிதத்தில்] முடிவில் நாலு வார்த்தை எழுதியிருந்ததை அப்போதே பிரசுரம் செய்து உலகமெங்கும் பரவச் செய்திருக்கிறார்கள்; அந்த வார்த்தைகளாவன:- (ஏ. வி. கோபாலாசார்யஸ்வாமியின் கடிதம் வருமாறு.)

Scanned by CamScanner

"அடியேன் இனிமேல் புதிதாக எந்த க்ரந்தமெழுதினாலும் அது இப்பொழுது தேவரீருடைய ஸத்யநாராயணஸ்த்ர க்ரந்தத்தை ஸேவித்துக் கொண்டதனாலுண்டான ஹர்ஷத்திற்கு அநுகுணமாகவேயிருக்கும். இதற்கு முன் எழுதப்பட்டு முடிந்து அச்சுக்கும் கொடுக்கப்பட்ட க்ரந்தங்களிலிருப்பதை மட்டும் க்ஷமித்துக்கொள்ளவேணும். தாஸ:- கோபாலசார்ய:, 14—8—35 திருச்சி." என்று.

இப்படி உண்மையுணர்ந்து ஸ்வாமி குணங்களில் ஈடுபடுவதன்றோ மஹான்களின் செயலாகக் காண்கிறது. க்ஷமித்துக்கொள்ளவேணுமென்று ப்ரார்த்தித்ததோடு நில்லாமல் அன்றுமுதல் அந்த மஹான் நம் ஸ்வாமியின் புகழ்களைத் தேசமறியப் பறைசாற்றிவருவது வாசாமகோசரம். அந்த ஸ்வாமி ஸமீபகாலத்தில் இங்கிலீஷில் எழுதி வெளியிடுவித்திருக்கும் வியாஸமொன்றே அவருடைய ப்ரதிபத்தியை உலகமுணர்ந்துகொள்ளத் தக்க சான்று. அந்த வியாஸத்தை அவர் எழுதி ஸ்வாமிக்கு அனுப்பவில்லை; ஸ்வாமியின் ப்ரபாவங்களை வெளியிடுவதற்கென்று கங்கணம் கட்டிக்கொண்ட சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் W. S. கிருஷ்ணஸாமி நாயுடு அவர்களுக்கு அனுப்பினர்; அந்த கனம் நீதிபதி மூலமாக வெளிவந்த தெலுங்குப் பிரசுரத்தில இந்த கோபாலாசார்ய ஸ்வாமியின் நீண்ட வியாஸம் வெளிவந்திருக்கிறது. அதாவது,

From: **A. V. GOPALACHARYA,** Contonement, Trichinopalli.

My loving Homage and hearty Mangalasasanams for a full century of health and vigour

I have known Sri Ubaya Vedanta P. B. Annangaracharya Swami intimately for about a quarter of a century. I am an ardent lover and admirer of the Swami and his stupendously great work he has been doing without intercession during the past four decades a more by way of (1) Writing and publishing innumerable works of inestimiable value expounding in lucid Tamil, Sanskrit and Hindi our ancient Dravida Prabhandhas and Rahasyas and Sanskrit stotra love of Alwars and Acharyas (2) publishing all the the sacred works of Sri Ramanuja, Desikar and Vara Vara Muni, (3) Writing and editing Tamil, Sanskrit and Hindi Journals. (4) Founding and endowing and conducting Ubaya Veda Vedanta pathasala paying stipends to the students at Kanchipuram. (5) Building and endowing and conducting a temple for Nambilla and publishing the Idu commentary and the commentaries of Periyavachan Pillay, (6) Giving Kalakshepams almost daily in the Guru parampara way and as discourses to large gatherings in Madras and various other cities all over the country in Tamil, Sanskrit and Hindi keeping his audiences literally spell-bound and (7) Writing long letters discussing literary and religious matters to Vaishnava friends all over the country and (8) making pilgrimages to sacred places including Badri, Benares, Brindawan, Ayodhya, Pushkaram delivering lectures in Hindi and Sanskrit to large audiences as the past teacher of revered memory Gadhi Ananthacharya Swami was doing. (9) Various other religious activities such as Ubhaya veda parayanam in Goshtis in the great festivities of Kanchi and other kshetras. The volume of work turned out by him is stupendous too much for any single man or for even a number of men put together. The qualities of his works has been invariably high. Desikar's followers organised as a body attempted twice to pubish all the works of Desikar as a uniform series. The first attempt made about 30 years ago stopped with the publication of one book Nyaya Parisuddhi.

Scanned by CamScanner

A second attempt made some years ago stopped with the publication of two books Nyayasiddhanjanam and Tattvateeka. Lack of funds was the cause of the stoppage of the work. During war-time when the cost of paper and printing was high, our Swami published all the works of Desikar including the Tamil Rahasyas as a uniform series in a record time. He has done very great service to the entire Sri Vaishnava community and the Sanskrit and Tamil world by placing all the works of Desikar within our easy reach and printed in a uniform series Our Swami has been writing in his inimitable lovely hand the manuscripts of his writings for the rest. My contact with our Swami has been cultural. My writing and and publishing of literary and religious works in Sanskrit, Tamil and English which commenced first quarter of a century ago is still going on in spite of advanced and rapidly advancing age My first contact with our Swami started with a letter written by him about 25 years ago asking for a copy of my Sanskrit commentary on a stotra by Desikar which had reached years He read the book the very day he received it five times as he said in his reply sent the same day showering generous praise on the work, since then he has been reading all my writings, published books or seeing in journals and then and there communicating me his warm appreciation of my work, although considerable in volume is nothing when compared to the Swami's colossal productions. I have all love and admiration from the Swami and I am proud of his love and regard for me and my writings. Our Swami is an invaluable asset to the Vaishnava community and to Sanskrit and Tamil literature. I can never cease to understand how he is finding the time for such unimaginable volumious work of excellent qualities which would have been physically impossible for any other persons. It is no question of dictating to shorthand or even of dictation.

At a late stage in life our Swami took into his head that he must make Adhyayanams of the Yajurveda as his God Varadaraja was fond of Sanskrit Veda Parayanam and he completed it in a wonderful by short time. He is a master, veda reciter in Goshti now He has the great quality of carrying through any great and good work he sets his mind upon.

Our Swami's exposition of some works of Desikar and his son Nainar whom his family claims as our Acharya are lucid and illuminating. The proverbial Pallandu Mangala sasanams and "ఇన్ను మొరు నూర్త్రాణ్డిరుమ్" flow from the fullness of my heart to our great Swami on this great occasion.

**A. V. Gopalacharya, M.A., B.L.,**

## ஸ்ரீ ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியின்
### இங்கிலீஷ் வியாஸத்தின் மொழிபெயர்ப்பு.

P. B. A. ஸ்வாமி அவர்கள் நூற்றாண்டு ஆயுள் அரோக த்ருடகாத் த்ரராயிருக்கவேண்டுமென்று என் அன்பார்ந்த வந்தனங்களையும் மனப் பூர்வமான மங்களாசாஸனங்களையும் செலுத்துகிறேன்.

உபய வேதாந்த ப்ரவர்த்தகராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளை நான் 25 வருஷ காலமாக நன்று அறிவேன். எனக்கு ஸ்வாமியிடத்தில் மிக்க அன்பும் ப்ரதிபத்தியும் ஏற்படுவதற்குக் காரணம் என்னவென்றால் யாதொரு இடையூறுமில்லாமல் சென்ற நாற்பது வருஷ காலமாக ஸ்வாமி செய்துவருகின்ற அரிய பெரிய அடியில் கண்ட தொண்டுகளே.

1. திவ்ய ப்ரபந்தங்கள், ரஹஸ்யங்கள், ஸம்ஸ்க்ருத ஸ்தோத்திரங்கள், ஆழ்வாராசார்யர்களுடைய ஸூக்திகள் இவை முதலான க்ரந்தங்களை தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி பாஷைகளில எழுதுவதும அவைகளை அநேக விதமாகப் பிரசுரிப்பதும்.

2. ஸ்ரீ ராமாநுஜர், தேசிகர், மணவாளமாமுனிகள் இப்பேர்ப்பட்ட மஹான்களுடைய உத்க்ருஷ்டமான க்ரந்தங்களைப் பிரசுரிப்பது.

3 தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி ஆகிய பாஷைகளில் வியாஸங்களையெழுதிப் பத்திரிகைகள் பிரசுரம் செய்துவருவது.

4. காஞ்சிபுரத்தில் உபயவேதாந்தபாடசாலையை ஸ்தாபித்து அதற்கு மூலதனம் ஏற்பாடு செய்து வித்யார்த்திகளைப் போஷித்துவருவது.

5. நம்பிள்ளை ஸன்னிதியை நிர்மாணம் செய்து ஈடு முப்பத்தாறு யிரப்படியைப் பரவச்செய்வது.

6. தமிழ், ஸம்ஸ்க்ருத, ஹிந்தி பாஷைகளில், பூர்வர்களின் ஆசாரப்படி மதராஸிலும் இன்னும் நம் இந்தியாவில் உள்ள அநேக பெரிய நகரங்களிலும் ஸபைகளிலும் ஜனங்களுக்கு எளிதில் விளங்கும்படி காலக்ஷேபங்கள், உபந்யாஸங்கள் செய்வது.

7. இந்தியாவில் இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மதசம்பந்தமாக நன்னடையில பெரிய நிருபணங்கள எழுதுவது.

8. மேன்மை பெற்றவரும் தேச முழுவதும் பிரக்யாதியடைந்தவருமான காலம் சென்ற ஸ்ரீ காஞ்சி அநந்தாசார்ய ஸ்வாமிகள் செய்த ரீதியாக விசேஷ ஸ்தலங்களான பத்ரி, காசி, பிருந்தாவனம், அயோத்தி, புஷ்கரம முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து ஆங்காங்குள்ள மஹாஜனங்களுக்கு ஹிந்தி, ஸம்ஸ்க்ருத பாஷைகளில் பிரசங்கங்கள் செய்வது.

9. மதசம்பந்தமான இன்னும் அநேக காரியங்கள்.

10. காஞ்சியிலும் இன்னும் இதர க்ஷேத்திரங்களிலும் கோஷ்டியுடன் உபய வேத பாராயணம் செய்து உத்ஸவங்களை நிர்வஹிப்பது.

இதுவரை இவர் செய்துமுடித்த மஹத்தான காரியங்கள் வேறொருவராலும் செய்ய முடியாத காரியங்கள். பலர் ஒன்று கூடியும் செய்ய முடியாது. மேலும் இவருடைய செய்கைகள் உயர்வுள்ளதாயும் இருக்கிறது.

Scanned by CamScanner

## A. V. கோபாலாசார்யஸ்வாமியின் வியாஸம்.

வேதாந்த தேசிகருடைய அடியார்கள் அவருடைய ஸ்ரீ ஸூக்திகளைப் பிரசுரிப்பதற்கு இரண்டு முறை முயற்சி செய்தார்கள். முதல தடவை 30 வருஷங்களுக்கு முன் ஆரம்பித்து ந்யாய பரிசுத்தி என்ற க்ரந்தம்தான் வெளிவந்தது. அவர்கள் செய்த இரண்டாவது முயற்சியில் ந்யாய ஸித்தாஞ்ஜனம் தத்வடீகை என்ற இவ்விரு க்ரந்தங்கள்தான். பண முடை என்ற காரணத்தால்தான் இந்த காரியம் செய்யமுடியவில்லை. யுத்த காலத் தில் காகித விலையும் அச்சுக் கூலியும் உயர்ந்திருந்தபோது நம் P. B. A. ஸ்வாமிகள் தேசிக ஸூக்திகள் எல்லாவற்றையும் அவர் செய்த தமிழ் ரஹஸ்யங்களையும் கோர்வையாக அதிசீக்கிரத்தில் வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீ வைஷ்ணவ உலகத்திற்கே ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் தேசிகஸூக்தி களை கோர்வையாக ஸர்வருக்கும் அதிஸுலபமாகக் கிடைக்கும்படி வெளியிட்டவர் இவரொருவரே.

ஸம்ஸ்க்ருதம், தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் 25 வருஷங்களுக்கு முன் நான் ஆரம்பித்த க்ரந்தங்களின் காரியம் இன்றும் எனக்கு அதிக வய தானாலும் கூட நடந்தேறிவருகிறது. எனக்கும் ஸ்வாமிக்கும் முதன் முதலில் பரிசயம் எப்படியென்றால், அவர் 25 வருடங்களுக்கு முன் எனக்கு தேசிக ஸ்தோத்திரத்தினுடைய ஸம்ஸ்க்ருத வியாக்கியானத்தை அனுப்பும்படி எழுதிய கடித மூலமாகத்தான். அப்புத்தகம் கிடைத்தபிறகு ஸ்வாமிகள் அதை ஐந்து தடவை பரிசீலித்து உகந்து கடிதமளித்தார். அதுமுதற் கொண்டு பரஸ்பரம் புத்தகங்களையும் பிரசுரங்களையும் அடிக்கடி பார்ப்பதும் அதற்கு பதிலளிப்பதும் புகழ்வதுமான சந்தர்ப்பங்கள இதுவரை நடந்து கொண்டு வருகிறது. ஆனால் ஸ்வாமிகள் செய்யும் அரிய பெரிய காரியங் களுக்கு நான் செய்யும் காரியம் ஓர் இணை இல்லை. ஸ்வாமி என்பேரில் வைத் திருக்கும் வாத்ஸல்யத்திற்கு நான அன்பு பாராட்டுவதும் கூட அது எனக்கு ஒரு சிகரமாகவே விளங்குகிறது. ஸம்ஸ்க்ருத தமிழ் ஸூக்தி களுக்கும் வைஷ்ணவ உலகத்திற்கும் ஸ்வாமி அவர்கள் விலையில்லா பொக்கிஷம்போல் இருக்கிறார். வேறு யாரும் செய்ய இயலாத அரிய பெரிய காரியங்களை அவலீலையாகஸ்வாமி செய்துவருகிறது எனக்கே ஆச்சரியத்தை விளைவிக்கிறது. ஸ்வாமிக்கு எப்போது ஒழிவோ அதுவும் தெரிய இட மில்லை. ஷார்ட் ஹேண்ட் எழுதுவதும் ஒருவருக்குச் சொல்லுவதும் அஸாத்யமான காரியம்.

காஞ்சீபுரம் தேவப்பெருமாள் வேதபாராயணத்தில் அன்புகொண்ட வராதலால் நம் ஸ்வாமிகள் யஜுர்வேதத்தை பூர்த்தியாக அதிசீக்கிரத்தில்

அத்யயனம் செய்து அதை கோஷ்டியுடன் ப்ரதிதினம் விடியற்காலம் நடத்திக்கொண்டு அந்த கோஷ்டிக்குத் திலகமாக விளங்குகிறார்.

நம் ஸ்வாமிகள் எந்த அரிய பெரிய காரியங்களெடுத்தாலும் அதை கவனித்து வெகு எளிதில் செய்து முடிக்கவல்லவர் என்பது திண்ணம்.

ஸ்வாமிகளின் குடும்பத்திற்கு ஆசாரியராக விளங்கும் தேசிகருடையவும் அவரது திருக்குமாரரான நயினாருடையவும் ஸூக்திகளை ஸ்வாமிகள் உபந்யஸிப்பது வெகு தெளிவாகவும் ஸ்பஷ்டமாகவுமிருக்கிறது.

ஸ்வாமிகள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்க வேண்டுமென்பதே என் ஹ்ருதயத்திலிருந்து ஓடும்படியான ஒரு ப்ரவாஹம்.

ஏ. வி. கோபாலாசாரியர்.

29. இப்படிப்பட்ட மஹான்கள் ஆயிரக்கணக்கானவர்கள் உள்குழைந்து உள்ளம் பூரித்து மதிப்புரைகள் எழுதியுள்ளது ஒருவருடைய நிர்ப்பந்தத்திற்காகவல்ல; அவரவர்கள் தாங்கள் ஸத்தை பெறுவதற்காக. அப்படிப்பட்ட மஹான்களில் ஒருவராவது இவ்வுலகில் இன்னொருநபரைப்பற்றி ஒருவரியாவது எழுதியிருப்பதுண்டோ? இப்பொழுது மூலைக்கொன்றாகக் கிளம்புகிற க்ராமஸிம்மங்களெல்லாம் D. ராமஸ்வாமி ஐயங்காருடைய திருவாக்கை பொய்யாக்குவதற்காகக் கிளம்புகின்றனவேயன்றி வேறொன்றுக்காகவன்றே. இம்மடத்தில் இவர்களுக்குக் கைவழிமண்ணாகவே யிருக்கின்ற வித்வான்களும் சிலருண்டே; அவர்களிலாவது ஒருவர் இந்த நிந்தைகளை யுக்தமென்று கொள்வரோ? ஆனால் ஒரு நபருண்டு; ரஹஸ்யத்தேள் கொட்டுவதாக இவர்களே எழுதிக்கொள்ளுகிறார்களே; புரட்டிப் புரட்டியடித்தாலும் மீசையில் மண்படவில்லையென்கிற ஆசாமிகளில் அக்ரதாம்பூலம் வாங்குமாசாமியான அந்த ஒருநபரையே இவர்கள் போற்றவும், இவர்களை அது போற்றவும் இப்படி பரஸ்பரம் உகந்துகொண்டு நிர்லஜ்ஜைப் பிழைப்பாய்க் காலம்கழிக்கலாம். உலகிலுள்ள சைவவைஷ்ணவ பண்டிதர்கள் பலர் கூடி உலகமெல்லாம் கொண்டாட வெளியிட்டிருக்கின்ற மெய்ப்பொருள் வாழ்ச்சி யென்னும் சிறந்த நூலினால் தகர்ப்புண்டு தலைகாட்டமாட்டாது தவிக்கின்ற—நெஞ்சுடைமை தானறிந்து காந்துறையுமந்த ரஹஸ்யவ்யக்தியை இந்த மடம் அடிக்கடி பிடித்திழுத்துப் பரிபவப்படுத்துவது வனே?

30. கடல் சூழ்ந்த மண்ணுலகில் யதார்த்த! வித்வத்ஸிம்ஹமாய் விளங்குகின்ற ஸ்ரீமதாஸுரி ஸ்வாமி யெனும் மஹாஸிம்ஹத்தோடொக்க ஈச்சம்வித்வானென்று ஸபமார்ஜ நீலக்ஷ்யவ்யக்தியைக் கூட்டித்தழுவிக்கொளவதன் பலன் யாது தெரியுமோ? "யாமுற்ற துற்றேயோ வாழி விருச்சிகமே!" என்று சொல்லி "ஆயவறியாதவற்றேடு அணைந்தழுத" என்று நம் மாமுனிகள் அருளிச்செய்த கணக்கிலே கட்டிக்கொண்டழுவதே யாமதநே.

T. N. ஜகன்னாத மென்கிற துரைரங்கராமாநுஜ தாஸன்,
(ரிடைர்ட் பிரெஞ்சு போலீஸ் இனிஸ்பெக்டர்.) எழுதிய

மடத்துக்கு மூப்பது முற்றிற்று.